விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 17 ஞாயிற்றுக்கிழமை (03.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 339

# விடுதலைப்புலிகளை தடைசெய்ய அரசாங்கம் யோசனை முன்வைப்பு

## நாடாளுமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை தடைசெய்ய அரசு ஆலோசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப்புலிகளை தடைசெய்யக்கோரும் சிறப்பு அறிக்கை ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. எனினும் எந்தவித தகவல்களும் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவில்லை. (04 ஆம் பக்கம் பார்க்க)



பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீதான தற்கொலைத் தாக்குதலைக் கண்டித்து ஜாதிக ஹெல உறுமயவினால் நேற்று கொழும்பில் போராட்டம் நடத்தப்பட்டது. இதனைப் படத்தில் காணலாம்.

## சாவகச்சேரியில் வைத்து! இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி டச்சு வீதியில் வாகனத்திருத்து நிலையம் ஒன்றிலே வைத்து நுணாவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். நேற்று காலை 9.30 மணியளவில் இனம் தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இவர் நுணாவில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் விமான குண்டுவீச்சு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் கிபிர் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்கு

## ஏப்ரலில் பொதுத் தேர்தலை நடத்த அரசுக்கு ஐ.தே.கட்சி சவால்

## வல்வெட்டித்துறையில் கைக்குண்டுத் தாக்குதல்

உடுப்பிட்டி வல்வெட்டித்துறை வீதியில் நேற்று அதிகாலை 5.00 மணியளவில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் கிபிர் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதல்களில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன.

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்றுக்காலை 10.50 மணியளவில் இரண்டு கிபிர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் (04 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு ஐ.தே.கட்சி சவால்

(கொழும்பு)

அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் பாராளுமன்ற தேர்தல் ஒன்றை நடத்துமாறு அரசாங்கத்திற்கு சவால் விடுவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் புதிய அதிகாரிகளை வரவேற்றும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சி ஒருங்கமைப்பு செய்த பின்னர் எந்த வேளையிலும் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க தயாராக இருப்பதாக அந்த கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார். (ச–7)

உடுப்பிட்டி வல்வெட்டித்துறை வீதியில் நேற்று அதிகாலை 5.00 மணியளவில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்குவைத்து கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்ததுடன் மற்றொருவர் காயமடைந்துள்ளார். இதனையடுத்து அப்பகுதி சிறிது நேரம் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதலும் இடம் பெற்றது என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. (ச–9)

# போர்நிறுத்த உடன்படிக்கையானது சரியான திட்டமிடலுக்குட்படவில்லை

## அனைத்துலக சிக்கல்களுக்கான குழு கடும் விமர்சனம்

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடையில் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை குறைபாடான அடிப்படைகளைக் கொண்டுள்ளது என அனைத்துலக சிக்கல்களுக்கான குழு (International Crisis Group)கடுமையாக விமர்சித்துள்ளது.

இது விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றினை அனைத்துலக சிக்கல்களுக்கான குழு இவ்வாறம் வெளியிட்டிருப்பதாக நோர்வேஜிய நாளிதழான டக்கஸ்சாவீசன் (Dagsavisen)நேற்று சனிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 2002 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை குறைபாடான அடிப்படைகளைக் கொண்டுள்ளதோடு நேர்த்தியான திட்டமிடல்களுக்கு உட்படவில்லை என்றும் அது அவசரமாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை என்றும் அவ் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டின் போர்நிறுத்த உடன்படிக்கை இராணுவ ரீதியிலான மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு வழி வகுத்த போதும் சமாதான முன்னெடுப்புக்கள் மந்தமானதாகவும் குறைபாடுகளையுமே கொண்டிருந்தது.

அதுவே ஈற்றில் போர் வெடிப்பதற்கும் வழிகோலியுள்ளது. சமாதான முன்னெடுப்பானது தீர்க்கப்படாத இனச்சிக்கலை முடிபுக்குக்கொண்டு வருவதற்கு உகந்த முதற்கட்ட முயற்சியாகும். (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுவிளம்பரம்


**மீண்டும் இயங்க ஆரம்பித்து விட்டது!**

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், கமரா வகைகள், எலக்ரோனிக் பிளாஸ்டிக் கண்ணாடி திருத்துதல் முதலிய வேலைகள் திறம்படச் செய்து கொடுக்கப்படும். ஒரு முறை விஜயம் செய்யுங்கள்! சு.நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (497)


## சிறுவர் கண்காட்சி

மகிழ்களம் சிறுவர் கண்காட்சி இன்று காலை 9மணிக்கு கைதடி விக்னேஸ்வரா மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி விக் னேஸ்வராக் கல்லூரி அதிபர் ச.ஞான லிங்கம், ராஜபுரி கள்ளிநகர் கிராம அலுவலர் செ.சிவசுப்பிரமணியம், வளர்மதி கிராம அலுவலர் சி.ரவீந்திரன், செயல்திறன் அரங்க இயக்க நிறைவேற்று இயக்குநர் தே.தேவானந்த் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (சு)

# இலங்கை இனப்பிரச்சினைக்கு கௌரவமான தீர்வு தேவை

## பில்கிளின்டன் வேண்டுகோள்



(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான கௌரவமான தீர்வு காணப்பட வேண்டும் என்று அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியும் ஐ.நா.சபை செயலாளரின் சிறப்புத் தூதுவருமான பில் கிளின்டன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு கடலூர் பகுதியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களில் நடை பெற்றுவரும் மறுவாழ்வுப்பணிகளைப் பார்வையிட சென்றிருந்த பில் கிளின்டன் ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நீண்டகாலமாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். மக்கள் வன்முறையை நிராகரிக்க வேண்டும். அரசியல் ரீதியான தீர்வுக்கு வழிகாண தங்களைத் திருப்ப வேண்டும்.

ஜனநாயக நெறி முறைகளுக்கு உட்பட்டு அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளத் தக்க கௌரவமான தீர்வு இலங்கையில் ஏற்பட வேண்டும் என்றார் அவர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள மறுவாழ்வுப் பணிகளைப் பார்வையிடுவதற்காக பில்கிளின்டன் நேற்று முன்தினம் கடலூருக்கு சென்றிருந்தார். (ச-5)

# விடுதலைப்புலிகளுக்கு தகவல் வழங்கிய ஏழு இராணுவத்தினர் தடுத்து வைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தகவல்களை விற்றதாக இராணுவ மேஜர் உட்பட 7பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். விடுதலைப்புலிகளுக்கு முக்கியமான இரகசியத் தகவல்களை மில்லியன் கணக்கான ரூபாய்க்கு விற்ற குற்றச்சாட்டில் இராணுவத்தில் உயர் பதவி வகிக்கும் அதிகாரியுடன் மேலும் ஆறு பேரை கொழும்பு நீதிமன்றம் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

இவர்கள் ஏறக்குறைய 70 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ரொக்கத்தையும் சொத்துக்களையும் வைத்திருப்பதாகவும் பல கொள்ளைகளை நடத்தியதாகவும் செல்வந்தர்களிடம் இருந்து பெருந்தொகையைப் பெற்றிருப்பதாகவும் விசாரணைகளி லிருந்து தெரிய வந்துள்ளது.

சந்தேகத்துக்குரிய இவர்களை இரண்டு மாதகாலம் தடுப்புக் காவலில் வைக்குமாறு கொழும்பு மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி குசல சரோஜினி வீரவர்த்தனா உத்தர விட்டுள்ளார்.

விசாரணைகள் மீண்டும் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# யாழ்.பிராந்திய தளபதி ஜீ.ஏ.சந்திரசிறி புற்றுநோய் மருத்துவமனைக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அண்மையில் தெல்லிப்பழை ஜீ.ஜீ.பொன்னம் பலம் புற்றுநோயாளர் மருவத்துவமனைக்கு விஜயம் ஒன் றை மேற்கொண்டார்.

இங்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் பற்றி கேட்டி ருந்த தளபதி சிகிச்சை பெற வந்திருந்த சுமார் 50 நோயா ளர்களுக்கு அரிசி, சீனி, செத்தல் மிளகாய், பயறு, பருப்பு போன்றவை அடங்கிய உலர் உணவுப் பொதிகளை வழங்கினார்.

யாழ்.வைத்தியசாலையில் சுமார் ஆயிரம் புற்று நோயாளர்கள் தம்மைப் பதிவு செய்திருப்பதாகவும் அவர்களுள் சுமார் 50 நோயாளர்கள் வார நாட்களில் சிகிச்சை பெற தெல்லிப்பழை மருத்துமனைக்கு வருவதாகவும் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 9 ஆம் திகதி இவ் வைத்தியசா லை புனரமைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை சுமார் 700 நோயாளர்கள் சிகிச்சை பெற்று சென்றுள்ளதாக வும் டாக்டர் என்.ஜெயக்குமார் தெரிவித்தார். இந் நிகழ்வில் வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# நலன்புரி நிலையங்களிலுள்ள சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கல்

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் கடந்த ஆகஸ்ட் 11 ஆம் திகதிக்கு பின்னர் இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள சிறார்களுக்கு சத்துணவு மா வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அமுல் படுத்தி வருகின்றது.

முகாம்களில் தங்கியுள்ள பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு வாராந்தம் ஒருகிலோநிறையுடைய சத்துணவு மா பைகற் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் மொத்தமாக 300 சிறுவர்கள் நன்மை பெறுகின்றனர்.

வடமராட்சியில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி விநாயகர் வித்தியாலயம், மணியகாரன் தோட்டம், சுடரொளி சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும் தென்மராட்சியில் மந்துவில் அரசினர் வித்தியாலயம், மந்துவில் வடக்கு சனசமூக நிலையம், மந்துவில் நவசக்தி சனசமூக நிலையம், மந்துவில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய இடங்களிலுமே மேற்படி சத்துணவு மா வழங்கப்படுகிறது.

இந்த சத்துணவு வழங்கல் தென்மராட்சியில் வெள்ளிக்கிழமையும் வடமராட்சியில் புதன்கிழமையும் தொடர்ச்சியாக இடம் பெறுமென நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (ச)

# பங்கீட்டு அட்டைக்கு பொருள் விநியோகம்

யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் பங்கீட்டு அட்டைக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. யாழ். பிரதான வீதியில் திருக்குடும்ப க் கன்னியர் மடம் உள்ள சந்தியில் விசேட கிளை ஒன்று திறக்கப்பட்டு அத்தியா வசியப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

குடும்ப அட்டை ஒன்றிற்கு 5கிலோ அரிசி, 2கிலோ பருப்பு, லக்ஸ்பிறே அல்லது அங்கர், குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு லக்டோஜன்- 2, மற்றும் பிஸ்கற் 3 பைக்கற் என்பன நேற்று முன்தினம் முதல் வழங்கப்படுகின்றன. சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் சேர்ந்தவர்கள் இப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (ச-5)

## நானாவிதப் பொருள்கள் செவ்வாய் முதல் விநியோகம்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் நானாவிதப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன. கடலை, பயறு, சர்க்கரை, புளி, மல்லி, தேயிலை, தேங்காயெண்ணை, தீப்பெட்டி, பற்பசை, மற்றும் தேங்காய்ப்பால்மா போன்ற நானாவித பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன. (ச-5)

# தேர்முட்டிகள் கலச அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சிவன் கோவில் ஐயனார், நடராஜர் தேர்முட்டிகளின் சாந்திப் பெருவிழாவும், கலச அபிஷேகமும் இன்று காலை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு மூல மூர்த்திகளுக்கு அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட தேர் மூட்டிகளுக்கு சாந்திப் பெருவிழாவும் கலச அபிஷேகமும் நடைபெறும் (ச)

# நீதி விடாது நின்றுரைக்கும் செயல் வீரர் அமரர் செல்லையா தம்பித்துரை



அமரர் செல்லையா தம்பித்துரை இந்த மண்ணை விட்டுநீங்கி ஒரு வருடம் ஆகி விட்டது. எனினும் அவரின் நினைவுகள்-பணிகள் எம் முன்னே நிழல் ஆடுகின்றன.

அமரர் அவர்கள் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியின் அயலில் பிறந்து

## மறைந்தார் மாண்பு

வளர்ந்து பரமேஸ்வராக் கல்லூரியில் அக்காலத்தில் கற்பித்த சான்றோர்களால் வழி நடத்தப்பட்டமையால் தம் வாழ்வினை செம்மையுற நடத்தும் நடத்தைக் கோலங்களைப் பெற்றுக் கொண்டார்.

அவர் பெற்றுக் கொண்ட ஆங்கில மூலக் கல்வியறிவும் பின்னர் வாய்த்த தமிழ் அறிவும் அவரை அரச பணியில் நற் பதவிகளில் அமர்த்தியது.

பல்வேறு இடங்களில் பலவகைப் பதவிகளையும் வகித்து பல்வேறுவகைக் குணங்களையும் கொண்ட மாந்தர் பலரையும் வாழ்வோட்டத்தில் அவர் சந்தித்தமையால் அவர் வாழ்க்கை நெறியும் வழிகாட்டலும் சீரிய நெறியுடையதாயிற்று.

நீதிமன்றங்களில் முதலியார் எனும் பதவி வகித்த பட்டறிவினால் அவர் எவரிடமும் எவ்விடயத்திலும் தமது கருத்துக்களை தாம் நீதியென நினைத்ததை அழுத்தந்திருத்தமாக வற்புறுத்திக் கூறும் வழக்கமுடையவராக விளங்கினார். பிறர் செய்வது தவறானது; முறையற்றது எனக்கண்டால் உடனேயே அவ்விடத்திலேயே அவர் முன்பே தவறினை எடுத்துக்காட்டிச் சரியானது இதுவெனக் கூறுவதில் அவர் என்றும் பின்நிற்பதில்லை. இதனால் பலர் அவரின் கண்டனத்துக்கு ஆளாகி அவரின்பால் மனக் கசப்பினை உடையவர்களாக மாறுவதும் உண்டு. பொய்யா மொழிப்புலவரின்

'கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க<br>
பின்னின்று முன்னோக்காச் சொல்'

என்ற குறள் வழிக்கொப்ப பின்னின்று புறங்கூறாது முன்னின்று ஒருவர் விடும் பிழையினை அவரின் முகத்திலேயே கூறி விடும் தன்மையினைக் கொண்டிருந்தார்.

ஆழ்ந்த ஆங்கில அறிவு, அத்துடன் தேடிக் கொண்ட தமிழ் அறிவும் அவரைச் சமூகத்தினருக்கு உற்றுழி உதவும் ஆலோசகராக மிளிரச் செய்தது. தன்னைத் தேடி வருபவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி நெறிப்படுத்தும் உயரிய பண்புடையவராகவும் விளங்கியமையை அனைவரும் அறிவர்.

அமரர் தம்பித்துரை அவர்கள் கண்டிப்பான கருத்துக்களை வேண்டியபோது தெரிவிப்பவராக விளங்கியபோதும் எல்லோரிடத்தும் அன்பு, இரக்கம், நட்பு, பரோபகார சிந்தனையுடையவராக விளங்கினார். அத்துடன் பிறருக்கு உதவி செய்யும் ஈந்து உவக்கும் பெருங்குணம் படைத்தவர் என்பதை பழகியவர்கள் அறிவர்.

'யான் பெற்ற இன்பம் பெறுக<br>
இவ் வையகம்' என்ற மந்திர மொழியை அமரர் அவர்கள் அடிக்கடி உரையாடலின் போது கூறுவது வழக்கம்.

அமரர் அவர்கள் ஓய்வு பெற்றுவந்த பின் கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய வழிபாடு செய்யும் நியமம் உடையவராக வாழ்ந்தார்.

ஆலய இடைக்கால நிர்வாக சபை உறுப்பினராக இருந்தவரை பின்னாளில் ஆலய பரிபாலன நிர்வாக சபையின் உப தலைவராக தெரிவுசெய்தனர். தலைவராக இருந்த பண்டிதர் கணேசபிள்ளை அவர்களின் மறைவுக்குப் பின்னர் ஆலய நிர்வாக சபையின் தலைவராக கடமையாற்றினார். நிர்வாக சபையின் கருமங்களை நெறிப்படுத்தி பல நிகழ்வுகளிலும் தலைமை தாங்கி தன் பணியை நிறைவு செய்துள்ளார்.

சைவப்புலவர்<br>
மு.திருஞானசம்பந்தப்பிள்ளை<br>
(ஓய்வு பெற்ற அதிபர்)

பிறர் மெச்சுவதற்காக செய்யும் செயல் நம்மை நாம் முட்டாளாக ஆக்கிக்கொள்ளத்தான் உதவும்.

—சுவாமி இராமதாசர்

வலம்புரி

## யாழ்.மத்திய பஸ் நிலைய மாற்றம் மக்கள் பெரும் திண்டாட்டம்

யாழ்.மத்திய பஸ்நிலையம் பண்ணைப் பகுதிக்கு மாற்றியமையினால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அதே நேரம் யாழ்.நகருக்கு நுழைவதற்கான வீதிகளால் பயணிப்பதும் மாற்றியமைக்கப்பட்டதனால் பொதுமக்கள் என்ன செய்வது ஏது செய்வது எனத் தெரியாது விழிக்கின்றனர்.

இத்தகைய திடீர் மாற்றங்கள் எதற்காக என்ற கேள்வியும் எழுந்துள்ளது. மாற்றங்கள் இடம் பெறுவது தவறல்ல. ஆனால் செய்யப்பட்ட மாற்றம் பொதுமக்கள் தத்தம் கருமங்களை இலகுவாக செய்து முடிப்பதற்கும் எதிர்கால அபிவிருத்திக்கும் உதவுவதாக அமைய வேண்டும்.

அதே சமயம் செய்யப்படும் மாற்றம் பற்றி பொது மக்களுக்கு தெரியப்படுத்துவதும் மாற்று ஒழுங்கு முறைகளையும் விளம்பரம் செய்வதும் கட்டாயமானதாகும்.

ஆனால் யாழ்.மத்திய பஸ்நிலையம் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின் வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குக் கூடத் தெரியாமல் இம் மாற்றம் இடம் பெற்றுள்ளது.

யாழ்.பஸ் நிலையம் இடம் மாற்றப்படவேண்டுமா? என்பது ஆய்வுக்குரியது. அப்படி எதுவும் மாற்றம் செய்வதாயின் துறைசார் அறிஞர்களோடும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்திய பின்னரே அதனை அமுல்படுத்த வேண்டும்.

இருப்பினும் யாழ்.பஸ் நிலையத்தின் அமைவிடம் என்பது வர்த்தக நிலையங்கள், போதனா வைத்தியசாலை மற்றும் வங்கிகள் என்பவற்றை சூழ் அமைவாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இவ் அமைவிடமானது நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளமை சிறப்புக்குரியது. இதனால் யாழ்.வைத்தியசாலைக்கு வருகின்றவர்கள், வங்கிக்கு வருகின்றவர்கள் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய தேவை இல்லாமல் இருந்தது.

இப்போது யாழ்.மத்திய பஸ் நிலையத்தை பண்ணைப் பகுதிக்கு மாற்றியதனால் பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நீண்ட தூரம் நடக்க வேண்டியிருக்கிறது.

அத்துடன் பண்ணைப் பகுதியின் வட பிராந்திய, தனியார் பஸ்களே தரித்து நிற்பதற்கு போதிய ஏற்பாடு இல்லாமையினால் எல்லாமே குழப்பமும் குறைபாடுமாகவுள்ளன.

இதனால் பாதிக்கப்படுவது பொதுமக்கள் என்பதால் முதியவர்கள் நிலைமையை உணர்ந்து செயற்பட வேண்டும்.

# தமிழகம் செல்லும் அகதிகள் மீது தீவிர பொலிஸ் விசாரணை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தமிழகத்தில் ஊடுருவி வருவதாக வெளியான தகவலைத் தொடர்ந்து உளவுப்பிரிவு பொலிஸார் நடத்திய விசாரணையில் இலங்கை அகதிகள் மூவாயிரம் பேர் பதிவு செய்யாமல் தங்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையே அறிவிக்கப்படாத போர் நடப்பதால் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகத்துக்கு தினமும் வருகின்றனர். ஜனவரி 12 முதல் இதுவரை 17 ஆயிரத்து 99 பேர் வந்துள்ளனர்.

அகதிகள் என்ற போர்வையில் தமிழகத்தில் ஊடுருவிய 26 போராளிகளைப் பொலிஸார் கைது செய்து சிறப்பு முகாம்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர். உளவுத் துறையினர் நடத்திய இரகசிய விசாரணையில் தமிழகம் முழுவதும் பதிவு செய்யாத அகதிகள் மூவாயிரம் பேர் இருப்பதாகவும் அவர்களில் புலிகளின் ஆதரவாளர்கள் ,போராளிகள் உள்ளதாகவும் போலி பாஸ்போட் மூலம் பலர் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

போராளிகளைக் கண்டு பிடிக்க பல்வேறு முகாம்களில் உள்ள இதுவரை பதிவு செய்யாத அகதிகள் தங்களின் பெயர் விலாசத்தை மண்டபம் அகதிகள் முகாமில் டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் பதிவு செய்யவேண்டும். பதிவு செய்யாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# இராணுவத் தாக்குதல்களுக்கு இணைத்தலைமைகள் பச்சைக்கொடி

அமெரிக்க வாஷிங்டனில் கடந்த மாதம் 21,22 ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமைநாடுகளின் கூட்டம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை முடுக்கிவிட இலங்கை அரசுக்கு பச்சைக்கொடி காட்டியுள்ளது என வேர்ள்ட் சோசலிஸ்ட் வெப் இணையத்தளத்திற்கு நந்தா விக்கிரமசிங்க எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும்,இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் பங்கேற்ற அமெரிக்கா ,ஐரோப்பிய, ஒன்றியம் நோர்வே ஆகிய நாடுகள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள கொழும்புக்கு ஊக்கமளித்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற ஜெனீவாப்பேச்சு தோல்வியடைந்த மூன்று வாரங்களில் இக் கூட்டம் நடைபெற்றது. இணைத் தலைமை நாடுகள் வெளியிட்ட கூட்டறிக்கையில் நாட்டில் நடைபெற்று வரும் இராணுவத் தாக்குதல்கள் பற்றி 'கவலை' தெரிவித்ததோடு 2002 ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கையை மதித்து நடக்குமாறு இரு தரப்புக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆனால் இந்த அறிக்கை சமாதான உடன்படிக்கையை மீறி கடந்த யூலை மாதம் முதல் விடுதலைப்புலிகள் பகுதிகளை கைப்பற்ற அரசு மேற்கொண்டு வரும் கடுமையான இராணுவத் தாக்குதல்கள் எதையும் கண்டிக்கவில்லை.

மிக்க கவனமாக 2002 ஆம் ஆண்டு உடன்படிக்கை பயன்படுத்துங்கள் என்று அந்த அறிக்கை கூறுகிறதே தவிர அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுங்கள் என்று கூறவில்லை.

அப்படிக்கூறும் பட்சத்தில் இராணுவம் கைப்பற்றிய விடுதலைப்புலிகளின் பிரதேசங்களில் இருந்து திரும்பப்பெற வேண்டி இருக்கும். இதனால் அரசுக்கு சாதகமான வாசகங்களை அந்த அறிக்கை பயன்படுத்தியுள்ளது.

மக்கள் அதிகம் வசிக்கும் இடங்களில் தாக்குதல்களைத் தூண்டுவதாக விடுதலைப்புலிகள் மீதும் அத்தகைய இடங்களில் தாக்குதல்களை நடத்தி அப்பாவிமக்களை உயிரிழப்புகளுக்கும் பாதிப்புக்களுக்கும் காரணமாக இருப்பதாக அரசாங்கத்தின் மீதும் அறிக்கை குற்றஞ்சாட்டியுள்ளது.

அதன் மூலம் விடுதலைப்புலிகள் பொதுமக்களை மக்கள் கவசமாக பயன்படுத்துவதாக மறைமுகமாக குறை கூறுகின்றது. இணைத் தலைமை நாடுகளை அனுமதியை அடையாளம் கண்டுகொண்ட கொழும்பு அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிடத் தொடங்கியுள்ளது.

அரசாங்கத்தின் மீது இணைத் தலைமை நாடுகள் எந்த முத்திரையையும் குத்தவில்லை என இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹெகலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

இணைத் தலைமை நாடுகள் அரசாங்கத்தை கடுமையாக கண்டிக்கப்போகிறது என்பது வெறும் கட்டுக்கதை அப்படி ஏதும் நடக்கவில்லை. பயங்கரவாதிகள் தாக்கும் வரை நாங்கள் தொடர்ந்து பதிலடி கொடுப்போம் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தைத் தொடர்ந்து அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதிச்செயலர் நிக்கலஸ் பேர்ன்ஸ் வெளிப்படையாகவே அரசாங்கத்தையும் அதன் இராணுவத்தாக்குதல்களையும் அங்கீகரித்துள்ளனர் என அக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வெள்ளவத்தையில் 8 பேர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தையில் நேற்றுமுன்தினமிரவு பொலிஸாருடன் இராணுவத்தினரும் கூட்டு சேர்ந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போது சந்தேகத்திற்கு இடமான 8பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் தமது அடையாளம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் காரணங்களை சமர்பிக்க தவறிய காரணத்தால் இவர்கள் விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச)

## தப்பியோடிய கைதிகள் நேற்று மதியம் கைது

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலையில் இருந்து தப்பியோடிய 5 சிறைக் கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை 4 மணியளவில் இக் கைதிகள் தப்பிச் சென்றனர்.

இவர்கள் மிலங்கொட்டுவ பகுதியில் வைத்து பதுங்கியிருக்கும் வேளையில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தப்பியோடிய பின்னர் கைது செய்யப்பட்ட கைதிகள் பல்வேறு கொலை மற்றும் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (ச)

## இந்தியாவில் இருந்து திரும்பிய 13 பொது மக்கள் கைது

இந்தியாவில் இருந்து திரும்பிய 13 பொதுமக்களை தலைமன்னார் பகுதியில் கடற்படையினர் கைது செய்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் இதேவேளை இவர்கள் கடந்த மூன்று மாதத்திற்கு முன்னர் இந்தியாவிற்கு சென்றிருந்ததாகவும் இவ்வாறு பெரும் தொகையில் நாடு திரும்புபவர்களை கைது செய்வது இதுவே முதற் தடவை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

## தற்கொலைத் தாக்குதல் சந்தேகத்தில் இருவர்கைது

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைக் குறிவைத்து கொழும்பில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இருவரும் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஆட்டோவின் உரிமையாளர்கள் என தெரிவிக்கப்பட்டது.

இவ்விருவரும் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவின் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஆட்டோவின் உரிமையாளரை அடையாளம் கண்டுள்ளதாகவும் இது தொடர்பில் இருவரை விசாரணை செய்து வருகிறோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-5)

# இந்து சமுத்திரப் பகுதியில் சுனாமி எச்சரிக்கை நிலையம்

(கொழும்பு)

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடைப்பட்ட இந்து சமுத்திர கடல்பகுதியில் முதலாவது சுனாமி எச்சரிக்கை மிதக்கும் நிலையம் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்து சமுத்திர பிராந்தியத்திற்கு சுனாமி எச்சரிக்கைகளை வழங்கும் வகையில் தாய்லாந்தினால் நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்டுள்ள 22 சுனாமி எச்சரிக்கை கட்டமைப்புக்களில் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. செய்மதியுடன் தொடர்புடைய இந்த நிலையம் ஆழ்கடலில் மிதக்கும் வண்ணம் இயங்கவுள்ளது.

குறிப்பிட்ட கடலில் வடபகுதியில் உள்ள பெரும்பலான நாடுகளுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் கூட்டியே சுனாமி எச்சரிக்கையை இந்த நிலையத்தின் மூலம் விடுக்க முடியும் என அமெரிக்க தேசிய சமுத்திர மற்றும் முகவர் நிர்வாகப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

22 ஆவது சுனாமி எச்சரிக்கை நிலையம் இந்தோனேசியாவில் சுமத்திரா தீவில் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் அமைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-7)

# நோர்வேயின் விசேட தூதுவர் செவ்வாய் அன்றே வன்னி பயணம்

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன்ஸ் ஹான்சன் பௌயர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளார்.

கடந்த புதன்கிழமை இலங்கை வந்த அவர், அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுக் குழுத் தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டீ சில்வா, சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோஹன்ன மற்றும் இலங்கையின் இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய முக்கிய நாடுகளின் தூதுவர்கள், இணைத்தலைமை நாடுகளின் இலங்கைத் தூதுவர்கள் உள்ளிட்ட பலரையும் சந்தித்து சமாதான பேச்சுக்குறித்து ஆராய்ந்து வருகிறார்.

இந்நிலையில் அரசாங்கத்திடம் இருந்து எதுவித ஆக்கபூர்வமான பதில்களும் கிடைக்காமல் எதிர்வரும் செவ்வாய்கிழமை வன்னி செல்கின்றார். (ச-7)

# சிறார்களை விடுவிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள்

(கொழும்பு)

சிறார்களைப் படையில் சேர்ப்பதை அனைத்து தரப்பினரும் உடனடியாக நிறுத்துவதுடன் முன்னர் இணைத்துள்ள சிறார்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்குத் தலைமை வகிக்கும் பின்லாந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இராணுவத்துடன் இணைந்து இயங்கும் துணைக்குழுவினரும், விடுதலைப் புலிகளும் சிறார்களை படையில் இணைத்து வருகின்றனர்.

சர்வதேச சிறார்கள் பாதுகாப்புச் சட்டத்தை மதித்து அனைத்து தரப்பினரும் படையில் உள்ள சிறார்களை உடனடியாக விடுவிக்கவேண்டும். இலங்கையில் சிறார்களுக்கு பாதுகாப்பற்ற சூழலே நிலவுகிறது என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ச-5)

# மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரிப் போராட்டம்

(கொழும்பு)

மத்திய மலையகத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் நேற்று தமது சம்பள உயர்வுக் கோரிக்கையை முன் வைத்து பல போராட்டங்களை நடத்தியுள்ளார்கள்.

தமது தோட்டங்களை விட்டு வீதிகளுக்கு வந்த தொழிலாளர்கள் அங்கு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். தோட்டத்துறைத் தொழில் சங்கங்கள் எல்லாம் இணைந்து தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரி முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சு நடத்தியதாகவும் ஆயினும் இடையில் இலங்கை தொழிலாளர்கள் காங்கிரஸ் குறைந்த சம்பள உயர்வுக்கு ஒப்புக் கொண்டு விட்டதாகவும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் கூறினார்.

இதனை அடுத்து நேற்று தொழிலாளர்கள் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கொடும்பாவி எரிப்பு போன்றவற்றில் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார்.

ஆனால் தமது அமைப்பு குறைந்த சம்பள உயர்வுக்கு உடன்பட்டதாகக் கூறப்படுவதை மறுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த புத்திரசிகாமணி தாம் கேட்ட சம்பள உயர்வை வழங்க தாம் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்த சமயம் சில சிறிய தொழில் சங்கங்கள் அதனை குழப்பும் விதமாக போராட்டங்களில் ஈடுபட்டதாகவும் தம்மால் அதிகபட்ச சம்பள உயர்வைப் பெற்றுத் தர முடியும் என்று அவை பொய்யாகக் கூறி வருவதாகவும் கூறினார்.

ஆகவே அத்தகைய சிறிய தொழில் சங்கங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் அந்தப் பேச்சு வார்த்தையில் இருந்த வாபஸ் பெற்றுள்ளதாகவும் புத்திரசிகா மணி கூறினார். (ச)

# க.பொ.த.சாதாரண தர பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

## பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரசிங்க தெரிவித்தார்.

5லட்சத்து 24 ஆயிரம் பரீட்சைசார்த்திகள் இம்முறை தோற்றவுள்ளனர். இதில் 160 பரீட்சார்த்திகள் சென்னையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதேவேளை பாதுகாப்புக் காரணங்களை கருத்திற் கொண்டு மட்டக்களப்பு கதிரவெளி மற்றும் வாகரைப் பிரதேசங்களில் சாதாரண தரப் பரீட்சையை நடத்துவது கஷ்டமாகவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அப்பகுதியிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் 250 மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு மாற்று இடங்களை வழங்குமாறு கல்வி அமைச்சர் பரீட்சைகள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார். (ச)

## போர்நிறுத்த...

அதன் பின்னான நான்கு ஆண்டு காலப் பகுதி குறிப்பிடத்தக்க அளவில் வடக்கு கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் வழி சமைத்தது.

ஆனால் அங்கு நிலவும் முரண்பாடு சிக்கலானது. சிக்கலான பல விடயங்கள் போர் நிறுத்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

### எரிக்சொல் ஹெய்ம் நிராகரிப்பு

போர் நிறுத்த உடன்படிக்கை அவசர ஏற்பாடு என்ற அனைத்துலக சிக்கல்களுக்கான குழுவின் குற்றச்சாட்டினை எரிக்சொல் ஹெய்ம் நிராகரித்துள்ளார். தாம் மிகவும் பொறுமையைக் கடைப்பிடித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் சிக்கலான பிரச்சினைகள் புறக்கணிக்கப்படவில்லை ஆனால் அவை கருத்தில் எடுக்கப்பட்டு மத்திய கிழக்கு தீர்வுக்குரிய 'ஒஸ்லோ உடன்படிக்கை' போன்று நிகழ்ச்சி நிரலில் பின் தள்ளப்பட்டுள்ளன.

சில சிக்கலான பிரச்சினைகள் கையிலெடுக்கப்படாது சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தரப்புக்களுக்கிடையில் பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவற்காகவே இலகுவான பிரச்சினைகள் முதலில் கையாளப்பட்டன.

அதுகூட இரு தரப்பினரின் முடிபாக இருந்ததேயன்றி நோர்வேயின் முடிபல்ல. இறுதித்தீர்வு பற்றி பேசுவதைத் தவிர்த்து போர் நிறுத்தம் மற்றும் பொருளாதார கூட்டுச்செயற்பாடு போன்ற அடிப்படை விடயங்கள் தொடர்பாக பேசுவதையே இரு தரப்பினரும் விரும்பினர் என்று எரிக்சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சமாதான முன்னெடுப்பில் நோர்வே 'அனுசரணையாளராக கடமையாற்றியதே தவிர சர்வாதிகாரியாக அல்ல' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5,9)

# விடுதலைப்புலிகளை தடை செய்ய...

தொடர்ந்து நடைபெற்று வரும் தற்கொலைத் தாக்குதல் சம்பவங்களையும் அதனால் ஏற்பட்ட இழப்புக்களையும் காரணம் காட்டி அதனடிப்படையில் விடுதலைப்புலிகளைத் தடை செய்ய வேண்டும் என நாடாளுமன்றில் சமர்பிக்கப் பட்ட மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், சமாதான செயலக பதில் பணிப்பாளர் கேதீஸ் லோகநாதன் ஆகியோரது மரணங்கள், இராணுவத் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் மீதான தற்கொலைத் தாக்குதல் மற்றும் கெப்பிட்டிக்கொல்லாவ கிளைமோர் தாக்குதல், ஹபரணையில் கடற்படையினர் மீதான தாக்குதல் போன்றவை இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சமாதான நடவடிக்கைகளில் எவ்வித ஈடுபாடும் காட்டாமல் மூத்த அரசியல் வாதிகள் மற்றும் பாதுகாப்புப் படை அதிகாரிகளைக் குறிவைக்கும் தாக்குதல்களைக் தொடர்ந்து வரும் பயங்கவாத அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பை சமூகத்தில் உலாவ விடுவது பேராபத்தாகும் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடு. இதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளை நிபந்தனைக்கு உட்பட்ட தடையை விதிக்க அரசு யோசித்து வருகிறது. விடுதலைப்புலிகள் அமைப்பு தடை செய்யப்படாமல் நோர்வே உட்பட எந்த ஒரு வெளிநாடும்விடுதலை புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியாது என்பதுடன் வெளிநாட்டு தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் விடுதலை புலிகளை சந்திப்பதற்கோ அவர்களது கட்டுபாட்டு பகுதிகளுக்கு செல்வதற்கோ அனுமதிமறுக்கப்படும் நிலை ஏற்படும். விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் முடிபை அரசாங்கம் எடுத்தால் அது புலிகளுக்கு மிகப்பெரிய இழப்பாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை 2002ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட்டது. இதேவேளை ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்பன விடுதலைப் புலிகளை இலங்கையிலும் தடைசெய்ய வேண்டும் என தெரிவித்திருக்கின்றன. இதனை வலியுறுத்தி ஜாதிக ஹெல உறுமய விகார மகாதேவி பூங்காவில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தியிருக்கின்றது.

இது குறித்து பாதுகாப்பு செயலரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக் வெல கருத்து வெளியிடுகையில், இந்த வருடத்தில் கனடா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன புலிகளை பயங்கரவாதம் என்று தடை செய்தன அத்துடன் சில நடவடிக்கைகளையும் எடுத்திருக்கின்றன. அதேபோல இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச சமூகம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. இதனை போன்று சர்வதேச சமூகம் எம்முடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றது.

இதனைப் போன்று சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகளை பேச்சு வார்த்தை மேசைக்கு கொண்டுவரவோ அல்லது அவர்களை ஒழிப்பதற்கோ தொடர்ந்தும் தமது ஆதரவை வழங்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்வது பற்றி கலந்துரையாடப்பட்டு வருகின்றது. எனினும் இது வரை தமிழீழ விடுதலைப்புலிகளை தடைசெய்வது குறித்து தீர்மானிக்கப்படவில்லை என்றார். (ச-5,7,9)

# மரண அறிவித்தல்

## செல்லையா அன்னப்பிள்ளை

அளவெட்டி மேற்கு செட்டியா கலட்டி தம்மலை சேர்ந்த செல்லையா அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா செல்லையாவின் அன்பு மனைவியும் திருநாவுக்கரசு, மனோன்மணி, ருக்மணி, நடராசா, தியாகராசா, நாகராசா, சிவனேசன், திலகவதி, கிருஷ்ணராசா, புஷ்பவதி, மகேந்திரன், ஆகியோரின் அன்புத் தாயாரும் பர்வததேவி, தனபாலசிங்கம், ஆறுமுகதாசன், இந்திராதேவி, வள்ளிநாயகிதேவி, யோகராணி, நாகம்மா, கைலாயபிள்ளை, தவமலர், ஜெயராசா, பாரதி ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ சுப்பிரமணியம்
புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

தகவல்
தி.ஜெயராசா
(மருமகன்)

(C-552)

## முல்லைத்தீவில்...

களை நடத்தின.

இத்தாக்குதலில் நந்தகுமார் (வயது-28) என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார். முல்லைத்தீவு வான்பரப்பில் வட்டமிட்ட இரண்டு கிபிர் விமானங்கள் எட்டு தடவைகள் குண்டு வீச்சில் ஈடுபட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ச-5)

## சாவகச்சேரியில்...

பகுதியைச் சேர்ந்த மயில்வாகனம் தவராசா (வயது-28) என அடையாளம் காணப்பட்டுள்ளார். சாவகச்சேரி பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-7)

இப்பத்திரிகை வலம்புரி அச்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.